# நடப்பு நிகழ்வுகள்- ஜூலை 13 - 2017

- குஜராத்தின் காந்தி நகரில் 600 கோடி ரூபாய் செலவில் “இந்தியாவின் முதல் அதிவேக ரயில் பயிற்சி மையம்” அமைக்கப்படவுள்ளது. இந்த மையம் 2020 முதல் செயல்படவுள்ளது.

- மேகாலயா முதல்வர் டாக்டர்.முகுல் சர்மா அண்மையில் 2017 ஜூலை 11 அன்று கிழக்கு காரோ மலைப்பகுதியிலுள்ள சாங்காக்கில் “Livelihood Intervention and Facilitation of Entrepreneurship (LIFE)” எனும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார். இத்திட்டம் பெண்கள் சுய உதவிக்குழுக்கல் மற்றும் கூட்டமைப்புகள் மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்துகிறது.

- ஆக்ஸிஸ் வங்கி இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரிபியனுடன் வர்த்தகத்தை அதிகரிக்க மற்றும் எளிதாக்க அமெரிக்க உள்நாட்டு முதலீட்டு நிறுவனத்துடன் (IIC) கூட்டுசேர்ந்துள்ளது.

- வியட்நாமின் துவா தியான் ஹியூ மாகாணத்திலுள்ள பச் மே தேசிய பூங்காவில் அழிவின் விளிம்பிள் இருக்கும் அரியவகை பாலூட்டியான சியோலாவுக்கான முதல் இனப்பெருக்க மண்டலம் அமைக்கப்படவுள்ளது. தனித்துவமான இனங்களை அழிவிலிருந்து காப்பாற்றும் சர்வதேச இயற்கை பாதுகாப்பு அமைப்பு மற்றும் உலக சியோலா பணிக்குழுவினர் ஆகியோரின் கூட்டு முயற்சியால் 2018-ல் இம்மையம் திறக்கப்படவுள்ளது.

- பெண்கள் ஒருநாள் சர்வதேச போட்டி வரலாற்றில் 6000 ரன்கள் எடுத்த முதல் பெண் கிரிக்கெட் வீரர் மிதலி ராஜ் ஆவார். 2017 ஜூலை 12 அன்று ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இந்தியாவின் ICC உலககோப்பை 2017-ல் இவர் இச்சாதனையை புரிந்தார். இங்கிலாந்தின் சார்லேட் எட்வர்சின் (5992) சாதனையை முறியடித்து பெண்கள் கிரிக்கெட்டில் மிக அதிய ரன்கள் வென்றவர் என்ற பெருமையை இவர் பெறுகிறார்.

- தேசிய காந்தி அருங்காட்சியகம் புதுடெல்லியில் அமையவுள்ளது. இது மகாத்மா காந்தியின் வாழ்க்கை மற்றும் கொள்கைகளை காட்சிப்படுத்துகிறது. 1948-ல் காந்தி படுகொலை செய்யப்பட்ட சிறிது காலத்திற்கு பின்னர் முதல் முறையாக மும்பையில் தொடங்கப்பட்டது.

- ஆளும் அரசு மீது சொந்த நாட்டு மக்கள் அதிக நம்பிக்கையுடன் இருக்கும் நாடுகளின் பட்டியலை பிரபல நாளிதழான போர்ப்ஸ் வெளியிட்டுள்ளது. இந்த பட்டியலில் இந்தியா 73 சதவீதம் பெற்று முதலிடத்தில் உள்ளது. 62 சதவீதம் பெற்று கனடா இரண்டாவது இடத்தை பெற்றுள்ளது.

- மும்பையில் உள்ள மதுரங்கா ரயில் நிலையம் நாட்டின் முதல் “மகளிர் ஸ்பெஷல்” ரயில் நிலையம் என்ற பெருமையை பெற்றுள்ளது. இந்த ரயில் நிலையத்தில் ஸ்டேஷன் மாஸ்டர், டிக்கெட் நிர்வாகி என அனைத்து ஊழியர்களுமே பெண்கள் தான்.

- 2018-ம் ஆண்டு ஜி-20 நாடுகளின் தலைவர்கள் மாநாடு அர்ஜெண்டினாவில் நடத்த முடிவுசெய்யப்பட்டுள்ளது. 2017-ம் ஆண்டுக்கான ஜி-20 மாநாடு ஜெர்மனியின் ஹம்பர்க் நகரில் நடைபெற்றது. 2019-ல் ஜப்பானிலும், 2020-ல் சவுதி அரேபியாவிலும் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

- உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பினால் (World Intellectual Property Organization (WIPO)), இந்தியாவில் முதல்முதலாக அமைக்கப்படும் TISC எனப்படும் “தொழில்நுட்பம் மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளுக்கான உதவி மையம்” (TISC-Technology and Innovation Support Center) பஞ்சாப் மாநிலத்திலுள்ள காப்புரிமை தகவல் மையத்தில் (Patent Information Centre) அமைக்கப்படவுள்ளது.

- கர்நாடக மாநிலம் தனது மாநிலத்திற்கென தனியாக மாநிலக் கொடியை வடிவமைப்பதற்கான சட்டரீதியான வழிமுறைகளை கண்டறிய 9 பேரடங்கிய உயர்மட்ட குழுவை அமைத்துள்ளது.

OXFORD IAS ACADEMY